# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 ஜீன் மாதம் 28 ஆம் தேதி வெள்ளி கிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

**பொருள் எண்-1**

கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச்19, ஏப்ரல்19, மே19 ஆகிய மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்-2**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.BEML JCB TN32 AV0727 என்ற வாகனத்திற்கு அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால், பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படுகிறது.மேலும் JCB வாகனம் கடந்த ஒரு வருடமாக பழுதுநீக்கம் செய்யவில்லை என்பதால் மேற்கண்ட வாகனத்திற்கு செல்ப்மோட்டார், ஆயில்ரீல்,ப்ரண்ட் பக்கெட் டீக், இன்ஞின் ஆயில் சர்வீஸ், பேட்டரி புதியது, வெல்டிங் ஓர்க்ஸ், மற்றும் இதர பழுதுகளை பழுது நீக்கம் செய்ய உள்ளூர் பனிமனைகளில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/2062 /2019)**

**பொருள் எண்-3**

**வேலையின் பெயர்:-** பொது சுகாதார பயன்பாட்டில் இயங்கிவரும் BEML JCB TN32 AV0727 என்ற வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், பேட்டரி பழுது, ப்ரண்ட் பக்கெட் டீத்,செல்ப் மோட்டார், இன்ஞின் ஆயில் சர்வீஸ், மற்றும் இதர பழுதுகள் ஆகிய பழுதுகளை நீக்கம் செய்தல் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி 14.05.2019ல் பெற்று உள்ளூர் குறைந்த விலைப்புள்ளிகள் 23.05.2019 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | ஸ்ரீதாய் லேபர் ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் | கண்ணகி மோட்டார் ஓர்க்ஸ் | ஸ்ரீவெங்கடேஷ்வரா லேபர் ஆட்டோ ஓர்க்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | Water Radiater assembaly set | 19700.00 | 19500.00 | 19900.00 |
| 2 | Oil cooler radiater assembly set | 18700.00 | 18500.00 | 18700.00 |
| 3 | water Oil Radiater (2 No's) Labour charges | 1600.00 | 1500.00 | 1700.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | Self Moter Armeture Field Coil Tape VarniesPrees Set Fitting Charges | 3900.00 | 3800.00 | 4000.00 |
| 5 | Front Bucket Hydralic Oil Seal Set (2No's) | 4400.00 | 4300.00 | 4500.00 |
| 6 | Bucket Hydralic oil Seal Fitting Charges | 1100.00 | 1000.00 | 1200.00 |
| 7 | Transmission oil -20Lit's | 3100.00 | 3000.00 | 3200.00 |
| 8 | Teeth Cutter 1Set | 2900.00 | 2800.00 | 3000.00 |
| 9 | Front Teeth Bolt Set (9No's) | 3340.00 | 3240.00 | 3440.00 |
| 10 | K.Oil -13Lit's | 3500.00 | 3500.00 | 3700.00 |
| 11 | Grease Gun (1No) | 1050.00 | 950.00 | 1000.00 |
| 12 | 28 Size Box (1No) | 450.00 | 350.00 | 400.00 |
| 13 | T. Rode (1No) | 700.00 | 600.00 | 700.00 |
| 14 | 4" Boom Bolt (2No's) | 80.00 | 70.00 | 90.00 |
| 15 | 4" SKP Boot Bolt (2No's) | 70.00 | 60.00 | 80.00 |
| 16 | 5" Boom Bolt (2 No's) | 90.00 | 80.00 | 100.00 |
| 17 | 125 Size Bush (2No's) | 300.00 | 280.00 | 300.00 |
| 18 | Transmission oil Service Bolt Nut Fitting Charges | 2600.00 | 2500.00 | 2800.00 |
| 19 | SF Battary Sonic FSK 1080-150R | 14950.00 | 13950.00 | 14200.00 |
| 20 | Hydralic 8 Feet Coolar Tank OSS (1No) | 5000.00 | 4900.00 | 5100.00 |
| 21 | Trasmission Moving Coil | 8000.00 | 9200.00 | 9300.00 |

| வ.எண் | விபரம் | ஸ்ரீதாய் லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ் | ஸ்ரீவெங்கடேஷ்வரா லேபர் ஆட்டோ ஒர்க்ஸ் |
|---|---|---|---|---|
| 22 | Moving Coil Fitting Charges | 900.00 | 800.00 | 950.00 |
| 23 | Engine Oil Pump Assembly (1No) | 3800.00 | 3679.00 | 3800.00 |
| 24 | Spin oil Filter LUB Oil | 450.00 | 412.00 | 450.00 |
| 25 | Primary Elemant | 390.00 | 374.00 | 390.00 |
| 26 | Filter Element Pre (1No) | 130.00 | 119.00 | 130.00 |
| 27 | Collent Pre Mix - 26Lit's | 3500.00 | 3399.00 | 3500.00 |
| 28 | Fuel Pipe (2No) | 270.00 | 248.00 | 260.00 |
| 29 | Fule Filter Car Trideue | 1450.00 | 1317.00 | 1350.00 |
| 30 | labour Charges | 1700.00 | 1500.00 | 1600.00 |
| | **Total** | **108120.00** | **105928.00** | **109840.00** |

அலுவலக குறிப்பு:-

**1.**மேற்கண்ட **3** விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், அங்கீகரிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2062 /2019/அ4)**

## பொருள் எண்-4

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் எண்.TN15Y6671ன் தற்போது, 1,68,000 கி.மீ.க்கும் மேல் ஓடிவிட்டதால், மேற்படி வாகனத்தினை ஆயில் சர்வீஸ், வைபர்பிளேடு, முன்பக்கபேனட் உள் ரப்பர், கண்ணாடி நான்கு டயர்கள் மற்றும் இதர பழுதுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்காணும் வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு, மஹேந்திரா நிறுவனத்தின் அனுமதி பெற்ற எஸ்.கே.எஸ் ஆட்டோ மொபைல்ஸ், சேலம் என்ற நிறுவனத்தாரிடம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுதுகளை மேற்கொள்ளவும், பெறப்படும் பட்டியலின் அடிப்படையில் தொகையினை வழங்கிடவும் அனுமதிக்கலாம்.
4. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
5. புதியதாக டயர் மாற்ற விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2728 /2019/இ1**

## பொருள் எண்-5

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள TN15Y6671 என்ற வாகனத்திற்கு புதியதாக டயர்கள் வாங்கி கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண். | விபரம் | சென்ரல் டயர் சேலம் | Wheels சேலம் | Tyrecentre சேலம் |
|---|---|---|---|---|
| 1 | 215/75R 15 Micnelin Tyre | 27600 | 29200 | 28800 |
| 2 | Tubetest value | 400 | 400 | 400 |
| 3 | Bolero Balering | 640 | 640 | 640 |
| 4 | Bolero alignment | 450 | 450 | 450 |
| | மொத்தம் | 31090 | 30690 | 30290 |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Tyre Centre,Salem அவர்களின் விலைப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்2728/2019/இ1

## பொருள் எண்-6

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எதிராக திரு. A. காசிவேல் மற்றும் திருமதி. R. கற்பகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு 15075/2019 – யை இந்நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்த தரவும். அதற்கான வழக்கு கட்டணம் ரூ.25,000/– திருமதி. நர்மதா சம்பத் Additional Advacat General - V. சென்னை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழங்கவும். மேற்படி செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. வழக்கின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதிப் பெற்று ரூ.

25,000/– பொது நிதியில் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண். 3569/2018/எச்1)

## பொருள் எண்-7

கள்ளக்குறிச்சி நகராட்சியில் சொத்துவரி சீராய்வு தொடர்பாக சொத்துவரி திருத்தம் அறிவிக்கை நாளிதழில் வெளியிடப்பட்டது. அதன்படி தினமணி நாளிதழில் **24.10.2019**ல் தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டு Express Publications (Madurai) Private Limited என்ற நிறுவனத்தின் மூலம் பட்டியல் எண்.VPMTN **90015316** நாள் **24.10.2018**ல் வரப்பெற்ற கடித்தில் பட்டியல் தொகை ரூ.**10685/–** வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற பட்டியல் தொகையினை தனி அலுவலரின் அனுமதி பெற்று படடியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மனறம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1970/2018/அ1)**

## பொருள் எண்-8

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு UIDSSMT திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 13277/2018/WS1 நாள். 03.07.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 13277/2018/DO1 நாள். 07.01.2019-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 29.03.2019 ஆம் தேதியன்று ONLINE / OFFLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதியினை நிர்ணயம் செய்து, தகுதி பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் விலை விகித (Price Bid) ஒப்பந்தப்புள்ளிகளை 14.06.2019 மதியம் 12.30 மணிக்கு திறக்கப்பட்டதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில் ) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள் ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கிடும் (7190 இணைப்புகள்) பணி | ரூ. 250.00 | **திரு. D.குமார், சென்னை** | **+5.51 % மதிப்பீட்டிற்கு ம் அதிகம்** |
| | | | திரு. E.சரவணன், கள்ளக்குறிச்சி | +10.00 % மதிப்பீட்டிற்கு ம் அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்களில் + 5.51% மதிப்பீட்டைவிட கூடுதலாக அளித்துள்ள **"திரு. D.குமார், சென்னை"** என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதால், L1 ஒப்பந்ததாரராக கருதி, விலைக்குறைப்பு செய்துதர 19.06.2019 அன்று கோரியதில், 23.06.2019 அன்று ஒப்பந்ததரார் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், பணிபுரியும் வேலையாட்களின் சம்பள உயர்வின் காரணமாகவும், **+5.51%**-லிருந்து, **0.61%** குறைத்து, **+4.90%**-க்கு பணியினை மேற்கொள்ள சம்மத கடிதம் கொடுத்துள்ளார். இதற்கு குறைவாக குறைத்துதர இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி **+4.90%**-க்கு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) அளித்துள்ள, **"திரு. D.குமார், சென்னை"** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. "**திரு. D.குமார், சென்னை**" என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.90%** என்ற விலைவிகிதத்தினை திட்டப்பணியின் அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 777 / 2018 / இ1 )**

## பொருள் எண்-9

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட Old S.No.293-6, New S.No.450-1ல் சுமார் 2.50 ஏக்கர்பரப்பளவு இடத்தில் திரு.துரைக்கண்ணன் த/பெ பழனியாப்பிள்ளை என்பவரின் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடம் அளித்து ஆக்கிரமிப்பு அகற்ற தடையுத்தரவு பிறப்பிக்குமாறும், மேற்கண்ட பகுதியில உள்ள முழு ஆக்கிமிப்பையும் அளவீடு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.16501/2019-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில் நகராட்சி ஆணையரை 3வது பிரதிவாதியாக குறிப்பிட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் திரு.v.ஜெயபிரகாஷ் நாராயணன் பெற்று வழக்கில் ஆஜராக வக்காலத்து அனுப்பி உள்ளார். நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராக தெரிவித்தும், எதிர்உரை தாக்கல் செய்யவும் வழக்குறைஞர் கட்டணம் ரூ.15000/— வழங்கக்கோரி வரப்பெற்ற கடிதத்தின் படி தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2926/2019/எப்1**

## பொருள் எண்-10

அரசாணை (நிலை) எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் எம்.ஏ.5, துறை நாள். 09.08.2010ன்படி இந்நகராட்சி முதல் நிலை நகராட்சி என்பதால் இந்நகராட்சி பொறியியல் பொறியியல் பிரிவில் 5 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. அதன் விபரம்

1. நகராட்சி பொறியாளர் — 1 எண்ணிக்கை
2. பணி மேற்பார்வையாளர் — 1 எண்ணிக்கை
3. நீர்த்தேக்க தொட்டி காவலர் — 1 எண்ணிக்கை
4. பணி ஆய்வாளர் — 1 எண்ணிக்கை
5. குழாய் ஆய்வாளர் — 1 எண்ணிக்கை

மேலும் இந்நகராட்சியில் தெருமின் விளக்குகள் குடிநீர் உபகரணங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் பணியிடங்கள் ஏதும் தோற்றுக்கப்படாததால் இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருமின் விளக்குகள் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. தெருமின் விளக்குகள்

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தெருமின் விளக்குகள் | 1167 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | 459 |
| 3. | சி.எப்.எல். | 154 |
| 4. | உயர்மின் கோபுர விளக்கு | 5 |
| மொத்தம் | | 1785 |

2. குடிநீர் பராமரிப்பு பணிகள் விவரம்

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | குடிநீர் இணைப்புகள் | 6790 இணைப்புகள் |
| 2. | பைப்லைன் அமைக்கப்பட்டது | 65.60(கி.மீ) |
| 3. | கேட் வால்வு திறப்பான் | 200 எண்ணிக்கை |
| 4. | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 6(30.00 இலட்சம் கொள்ளளவு) |
| 5. | மினிபவர் பம்பு 2000 லிட்டர் கொள்ளளவு | 283 எண்ணிக்கை |
| 6. | கைப்பம்பு | 15 எண்ணிக்கை |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததால் மாவட்ட ஆட்சியர் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்தில் 20 பணியாளர்கள் நியமனம் செய்து கொள்ளவும் தினக்கூலி விகிதத்தில் ரூ.353/– வீதத்தில் 20 பணியாளர்களுக்கு 01.06.2019 முதல் 30.9.2020 முடிய 122 நாட்களுக்குரூ.8.61,320/– (ரூபாய் எட்டு இலட்சத்து எண்பத்தி ஒராயிரத்து முன்னூற்று இருபது மட்டும்) நிர்வாக அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் வழியே 20 நபர்களை நியமனம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் ஊதியம் வழங்கவும் செலவினத்தை பொதுதிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2019/இ1)

## பொருள் எண்-11

சென்னை-28, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31159/2018/டிபி3 நாள் 05.03.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின்படி, அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் தமிழ்நாடுஅரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a) நாள் 04.02.2019ன்படி, கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள், கூடுதல் கட்டிடங்கள் மற்றும் புதிய மனைப்பிரிவுகள் அமைக்கும் போது நகரமைப்பு பிரிவு சட்ட விதிகளுக்கு உட்பட்டு கட்டிட அனுமதி மற்றும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உரிய கட்டிட அனுமதிக் கட்டணம், கட்டிட அபிவிருத்தி கட்டணம் மனைப்பிரிவுக்கான கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் தற்போதுள்ள நடைமுறையிலிருந்து **கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு** இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்குவழங்குவதற்கேற்பவும் மாற்றியமைக்கவும், திருத்திய கட்டண விகிதங்கள் மன்ற ஒப்புதல்லுக்கு வைக்கப்படுகிறது.

**கள்ளக்குறிச்சி நகராட்சி**

**கட்டிட உரிமக் கட்டணங்கள் திருத்தியமைத்தல் குறித்த அறிவிப்பு**

திருத்தப்பட்ட 1920-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகள் 321(2), 328 மற்றும் 329-ன்படி, திருத்தியமைக்கப்பட்ட உத்தேச உரிமையாணைக் கட்டணங்கள் 01.09.2019 தேதி முதல் வசூலிக்கப்பட கீழ்க்காணுமாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | ஏற்கனவே வசூலித்த கட்டணம் | தற்போது வசூலிக்க உத்தேசிக்கப் பட்டுள்ள கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 175 | **மனை உட்பிரிவு அனுமதி கட்டணம்** | | | | |
| | | அ) 2 மனைகள் வரை | | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 176 (அ) | காலியிடத்தை தெருக்கள் அங்கீகாரம் செய்ய மேற்பார்வை கட்டணம் (Layout Fees) | ஒரு ஏக்கர் அதன் பாகம் | இல்லை | 5000/- | ஒரு முறை மட்டும் |
| 3 | -- | நகரமைப்பு ஆய்வரின் புதிய மனைப்பரிவு ஆய்வுக் கட்டணம் | மனைப்பிரிவு ஒன்றுக்கு | இல்லை | 5000/- | ஒரு முறை மட்டும் |
| 4 | 183 | அ) கட்டிடங்களுக்கு முன்னால் உள்ள தெருக்களில் தற்காலிகமாக பந்தல், நிழல், தட்டி முதலியவைகள் போட்டுக் கொள்ள,<br>ஆ) சர்க்கஸ் (அ) கேளிக்கை நிகழ்ச்சிக்கு | 1 ச.மீ.அதன் பாகத்திற்கு<br>1 ச.மீ.அதன் பாகத்திற்கு | இல்லை<br>இல்லை | 30/-<br>30/- | ஏழு தினங்கள் மட்டும்<br>ஒரு முறை மட்டும் |
| | 186 | இ) துக்க காரியங்களுக்கு பந்தல் போட | 1 ச.மீ.அதன் பாகத்திற்கு | இல்லை | இலவசம் | மூன்று தினங்கள் மட்டும் |
| | | இ) கல்யாணம் மற்றும் விஷேச காலங்களில் பந்தல் போட | 1 ச.மீ.அதன் பாகத்திற்கு | இல்லை | இலவசம் | மூன்று தினங்கள் மட்டும் |
| 5 | 186 | **தெருக்களில் போக்குவரத்து இடைஞ்சல் இன்றி கட்டிட சாமான்கள் சேகரித்து வைக்க**<br>அ) .சாதாரண குடியிருப்பு | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | அனுமதி கட்டணத்தில் 25% கூடுதலாக கட்ட வேண்டும் | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ. ரூ.10/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| | | ஆ) அடுக்குமாடி மூன்று குடியிருப்புக்கு மேல் | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | -Do- | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ. ரூ.10/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| | | இ). பல அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் வணிகம் , தொழிற்சாலை அலுவலக கட்டிடங்கள் | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | -Do- | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ. ரூ.10/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| 6 | 197<br>199 | **<u>குடியிருப்பு கட்டடம்</u> (சாதாரணம் கட்டடம் /அடுக்குமாடி கட்டடம்)**<br>அ) RCC மற்றும் தட்டோடு தரைதளம் மற்றும் தரை கீழ்தளம் அமைக்க<br>Basement floor, under ground floor and ground floor. | ஒவ்வொரு 1 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 1 ச.மீ.15/– வீதம் | 30/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| | | ஆ) முதல்மாடி கட்டிடம் கட்ட<br>First Floor | ஒவ்வொரு 1 ச.மீட்டருக்கு | 18/- | 40/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| | | இ) 2ம் தளம் கட்ட மற்றும் அதற்கு மேல்<br>Second Floor and above | ஒவ்வொரு 1 ச.மீட்டருக்கு | 18/- | 50/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 7 | | சுவர் (அ) வேலி முதலியவை அமைத்தல்<br>2.40 மீ உயரம் மேற்படாமல் | நீளத்திற்கு 1 ச.மீ. | ரூ.200/– | 20/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 8 | | கிணறு (அ) ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதி | 1 க்கு | ரூ.200/– | 500/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 9 | | **<u>இடம் ஆய்வு கட்டணம்</u>**<br>அ) குடியிருப்பு (Inspection Charges) | ஒருமுறை மட்டும் | இல்லை | 500/- | ஒரு முறை மட்டும் |
| | | ஆ) வணிகம் (Inspection Charges) | ஒருமுறை மட்டும் | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |
| 10 | | குடியிருப்பு வீடு கட்ட, மனை அங்கீகரிக்க (Site approval) | 1–க்கு | ரூ. 300/– | 1000/- | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | | குடியிருப்பு அல்லாத கட்டுமானங்கள் கட்ட மனை அங்கீகரிக்க(கடை, குடோன், அலுவலகம், கட்டுமானங்கள் கட்ட) (Site approval) | 1–க்கு | ரூ. 600/– | 2000/- | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் |
| 12 | | இதர கட்டிட மனைகள் அங்கீகரிக்க (கல்வி தொழிற்சாலை , மருத்துவமனை, குடிசைத் தொழில் லேபர், ஓட்டல், கல்யாண மண்டபம் கட்ட) (Site approval) | 1–க்கு | இல்லை | 3000/- | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் |
| 13 | | **குடியிருப்பு அல்லாத கட்டிடம்**<br>அ) RCC, தட்டோடு, தரைதளம், தரைகீழ் தளம், முதல்தளம் வரை | 1 ச.மீ | 30/-<br>1 ச.மீ | 60/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| | | ஆ) அதற்கு மேல் தளம் | 1 ச.மீ | 36/- | 100/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 14 | | A. குளியல் அறை<br>B.கழிவறை<br>C. செப்டிக் டேங்க்<br>D.மாடி படிக்கட்டு<br>E.குளியல் அறை மற்றும் கழிவறை | ஒரு எண்ணிக்கை<br>“<br>“<br>“<br>“ | இல்லை<br>இல்லை<br>200/-<br>இல்லை<br>இல்லை | 200/-<br>200/-<br>500/-<br>200/-<br>400/- | ஐந்து ஆண்டுகள் அனுமதி |
| 15 | | அ) மனைப்பிரிவு வரைபட நகல்<br>ஆ) கட்டிட வரைபட நகல்<br>இ) மன்ற தீர்மான நகல் | ஒன்றுக்கு<br>“<br>“ | இல்லை<br>100/-<br>இல்லை | 300/-<br>200/-<br>100/- | ஒரு முறை மட்டும்<br>“<br>“ |
| | | **அபிவிருத்தி கட்டணங்கள்**<br>1). குடியிருப்பு கட்டிடம்<br>2). குடியிருப்பில்லாத கட்டிடம் | 1 ச.மீ<br>1 ச.மீ | 4.00<br>8.00 | 10.00<br>20.00 | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 16 | | **இதர கட்டணம்**<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (OHT) தனியாக அமைக்கும் பட்சத்தில் | ஒன்றுக்கு | இல்லை | 500/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 17 | | **நகராட்சி வரைபட வரைவாளராக உரிமம் வழங்க** | | | | |
| | | a)பதிவுக் கட்டணம் | ஒருமுறை | இல்லை | 5000/- | நிதி ஆண்டு |
| | | b)வைப்புத் தொகை | ஒருமுறை | இல்லை | 3000/- | ஒரு தடவை மட்டும் |
| | | c)உரிமம் புதுப்பித்தல் | வருடத்திற்கு | 1000/- | 5000/- | ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை |
| 18 | | சங்கிலி போட்டு இடத்தை அளந்து காட்ட | ஒரு சர்வே எண்ணிற்கு | இல்லை | 500/- | ஒரு முறை மட்டும் |
| 19 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல் இன்றி கட்டிடம் ஒயிட் வாஷ், பெயிண்ட் அடித்து பராமரிப்பு செய்திட | பட்டா இடத்திற்கு மட்டும் | இல்லை | இலவசம் | ஒரு முறை மட்டும் |
| 20 | 204 | கட்டிட அனுமதி ஆணை வழங்கப்பட்ட கால அளவுக்குள் **(ஐந்து ஆண்டுகளுக்குள்)** கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலையில் மீண்டும் அமைப்பு படங்களுடன் புதியதாக மனு செய்து உரிய கட்டணங்கள் செலுத்தி புதியதாக கட்டட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். | பெறப்பட்ட கட்டட அனுமதி காலம் முடிவுற்ற நிலையில் | கட்டிட அனுமதி பெறும் பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் முழுவதும் செலுத்தி வரைபடங்கள் சமர்ப்பிக்க வேண்டும் | கட்டிட அனுமதி பெறும் பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் முழுவதும் செலுத்தி வரைபடங்கள் சமர்ப்பிக்க வேண்டும் | பெறப்பட்ட கட்டிட அனுமதி காலம் ஐந்தாண்டு முடிவுற்ற நிலையில் ஒரு மாதத்திற்கு முன்னர் மனுதாரர் விண்ணப்பித்தால் ஏற்கனவே செலுத்திய மொத்த கட்டணத்தில் 75% கட்டணம் செலுத்தினால் போதுமானது. தவறினால் 100% கட்டணம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | | நகராட்சியால் வழங்கப்படும் சான்று (ஒன்றுக்கு) | சான்று ஒன்றுக்கு | 50/- | 300/- | ஒரு முறை மட்டும் |
| 22 | | நகர வரைப்படம் நகல் வழங்க (TOWN MAP) | நகல் ஒன்றுக்கு | இல்லை | 500/- | – |
| 23 | | மழைநீர் சேகரிப்பு தொட்டி (Rail Water Harvest) | ஒரு முறை கட்டணம் | 3000/- | 4000/- | கட்டிடம் கட்டி மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து போட்டோவுடன் மனுதாரர் சமர்பித்தால் செலுத்திய தொகை திருப்பி வழங்கப்படும் |
| 24 | | சர்வே புலப்பட நகல் மற்றும் 'அ' பதிவேடு நகல் வழங்க (TSLR & FMB) | ஒரு புல எண்ணிற்கு | இல்லை | 400/- | ஒரு முறை மட்டும் |
| 25 | | கட்டிட அனுமதி பெறும் முன்பு கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 25% கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் | – | – | கட்டிட அனுமதி பெறும் முன்பு அங்கீகாரம் அளிக்கப்படும் வரைபடத்தின்படி கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் | – |
| 26 | | கட்டிட இடிமானம் அப்புறப்படுத்த | ஒரு முறை | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |
| 27 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மாறுதல் இன்றி கட்டிடம் பராமத்து செய்துகொள்ள | பட்டா இடத்திற்கு மட்டும் | இல்லை | 500/- | ஒரு முறை மட்டும் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்ப கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்குவழங்குவதற்கேற்பவும் மாற்றியமைக்கவும் இதனை 01.9.2019அ முதல் அமல்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்
2. புதிய கட்டண விகிதத்தினை அமல்படுத்த பொதுமக்கள் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை 15 தினங்களில் பெறும் வகையில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்குரிய செலவினத்திற்கு
3. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க,எண். 3159/2019/எப்1)**

## பொருள் எண்-12

நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 27 மின்கலனில் இயங்கும் வாகனம் (BOV) வழங்கப்பட்டுள்ளது. இதில் குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து நுண்ணுயிர் மையம் மற்றும் RRC பகுதிக்கு குப்பைகளை எடுத்து செல்ல **80** லிட்டர் கொள்ளவு கொண்ட பைபர் பின்கள் (Blue, Green colour-ல்) வாகனம் ஒன்றிற்கு **6** பின்கள் வீதம் **(27* 6= 162)** கூடுதலாக **38** ஆக மொத்தம் **200** பின்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2.50** இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2831 /2019/எச்1)**

## பொருள் எண்-13

கள்ளக்குறிச்சி நகராட்சி 09.08.2010-லிருந்து முதல் நிலை நகராட்சியாகயும், 21 வார்டுகளை உள்ளடக்கி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 52507 மக்கள் தொகை கொண்டதாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி தெரு மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | -- | 1061 |
| 2. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | -- | 462 |
| 3. | 36 வாட்ஸ் சி.எப்.எல். விளக்குகள் | -- | 373 |
| 4. | உயர் கோபுர மின் விளக்குகள் | -- | 5 |
| | **மொத்தம்** | **--** | **1901** |

மேற்கண்ட தெரு விளக்குகளை பராமரிக்க தற்போதுள்ள குறியீட்டின்படி வயர்மேன்–3 பணியிடங்கள் மற்றும் ஹெல்பர் பணியிடங்கள்–3 தேவைப்படுகிறது ஆனால் இந்நகராட்சிக்கு மேற்படி பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலை பட்டியலின்படி தினகூலி வழங்கப்படுகிறது. இந்நகராட்சிக்கு பணியாளர்கள் சம்பளம் மற்றும் தேவையான மின் உபகரணங்கள் வாங்க ஆண்டு ஒன்றிற்கு ரூ. 29.50 இலட்சம் செலவாகிறது. இப்பணியினை தனியார் வசம் ஒப்படைக்கும் பட்சத்தில் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 29.00 இலட்சம் ஆகும். இதனால் நகராட்சிக்கு நிர்வாக செலவினம் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

மேற்காணும் தெருமின் விளக்கு பராமரிப்பு பணிக்கு பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தினை முன்னிட்டும், தனியார் மயமாக்கிட அரசாணை (நிலை) எண். 69, நாள். 04.05.1998ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பொதுமக்கள் பயன்பட கூடிய சேவைப்பணிகளை திறம்பட செயல்படுத்திட தனியார் மயமாக்கி நிறைவேற்றிகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாணையின் வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி இந்நகராட்சியின் தெருமின் விளக்கு பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் வசம் ஒப்படைக்கவும், மேற்படி பணியினை தனியார் மூலமாக செயல்படுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெருமின் விளக்கு பராமரிப்பு பணியினை தனியார் மயமாக்கிட உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் மூலமாக அனுப்பவும் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3513 / 2019 / இ1 )**